

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் காசிநாதபுரம் துர்கா மில் எதிரில் மாபெரும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் ஒன்றிய செயலாளர் கே.ராஜேந்திரன் முன்னிலையில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் காளிதாஸ் வரவேற்பில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், கொள்கை பரப்பு செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், தர்பூசணி மற்றும் தயிர்சாதம் பல்வேறு குளிர்பானங்கள் வழங்கினார்கள். அருகில் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாற்றுத் திறனாளிகள் அரசு பேருந்துகளில் பயணம் செய்யும் போது

# ஓட்டுநர்கள் - நடத்துனர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை!



சென்னை, மே 4 -

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில், மாற்றுத் திறனாளிகள் பயணம் செய்யும் பொழுது, ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள், கடைப்பிடிக்க வேண்டிய நிலையான இயக்க நடைமுறைகள் (Standard Operating Procedures) போக்குவரத்துத்துறை, தலைவர் அலுவலகம் வாயிலாக கடித எண் 453/Ch2/ChO/2022, நாள்: 10/01/2022, கடித எண்: 750/Ch5/ChO/2022, நாள்: 05/01/2023 மற்றும் கடித எண்: 453/Ch5/ChO/2023, நாள்: 30/01/2023 மூலம் வழங்கப்பட்டு, ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு சுற்றறிக்கை வாயிலாக ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இருந்த போதிலும், சில நேரங்களில் இவ்வியக்க நடைமுறைகள் பின்பற்றப்படாமல் புகார்கள் பெறப்படுகின்றன. இதனை தவிர்க்கும் பொருட்டு, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இயக்க நடைமுறைகளை, ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தவறாது பின்பற்றுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. மாற்றுத்திறனாளி பயணிகள் பேருந்திற்காக, பேருந்து நிறுத்தத்தில் நிற்கும் பொழுது பேருந்தை முறையாக நிறுத்தி மாற்றுத்திறனாளி பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும். ஒரு மாற்றுத்திறனாளி பயணி பேருந்து நிறுத்தத்தில் நின்றாலும் பேருந்தை நிறுத்தி ஏற்றிச் செல்ல வேண்டும்.

2. ஓட்டுநர் பேருந்து நிற்பதற்கு என அரிதியிடப்பட்டுள்ள பேருந்து நிறுத்தத்தில் தான் பேருந்தை நிறுத்த வேண்டும். பேருந்தை நிறுத்தத்திற்கு முன்பாகவோ /தள்ளியோ நிறுத்தி மாற்றுத் திறனாளி பயணிகளுக்கு ஏறி/ இறங்க சிரமம் ஏற்படுத்துக்கூடாது.'

3. நடத்துனர் வேண்டும் என்றே, பேருந்தில் இடமில்லை என்று கூறி பேருந்தில் ஏறும் மாற்றுத்திறனாளி பயணிகளை பேருந்தில் இருந்து இறக்கிவிடக் கூடாது.

4. மாற்றுத்திறனாளிகளுக்கு என பேருந்தில் ஒதுக்கப்பட்ட இருக்கைக்கு மேல் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளதை அறிவித்து, அவர்கள் அமர்ந்து பயணம் செய்ய உதவி செய்ய வேண்டும்.

5. மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்குரிய இருக்கையில் அமர்ந்தவுடன், கனிவுடன் பயணச்சீட்டுக்கள் வழங்கி அவர்கள் இறங்க வேண்டிய இடங்களில் பேருந்தினை நிறுத்தி, இறங்குவதற்கு மனிதாபிமான அடிப்படையில் நடத்துனர்கள் உதவி செய்வதுடன், அவர்கள் இறங்கும் வரை காத்திருந்து அவர்கள் இறங்கி கடந்து சென்ற பின்னர் பேருந்தினை நகர்த்த வேண்டும்.

6. சாதாரண பயணிகள் மாற்றுத்திறனாளிகள் இருக்கையில் அமர்ந்திருந்தால் அவர்களை கனிவுடன் மாற்று இருக்கைகளில் அமரச்செய்து, மாற்றுத்திறனாளிகளை அந்த இருக்கையில் அமரச் செய்ய வேண்டும்

7. பேருந்து நிலையங்களில் பேருந்து புறப்படுவதற்கு முன், மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இருக்கையில், பேருந்து புறப்படும் வரையில் இதர பயணிகளை அமர வைக்காமல் வைத்திருந்து, ஒரு வேளை சாதாரண பயணிகள் அமர்ந்து இருப்பின், கடைசி நேரத்தில் மாற்றுத்திறனாளிகள் பேருந்தில் ஏறினால், சாதாரண பயணிகளை மாற்றுத்திறனாளிகள் அமரும் பொருட்டு அவர்களுக்கான இருக்கையினை தர வேண்டும் என தெரிவித்து அமர வைக்க வேண்டும்.

8. மாற்றுத்திறனாளி பயணிகளிடம் அவர்கள் மனம் புண்படும் வகையிலோ, எரிச்சலூட்டும் வகையில் கோபமாகவோ, ஏளனமாகவோ, இழிவாகவோ பேசக்கூடாது.

9.பேருந்தில் ஏறும் மாற்றுத் திறனாளி பயணிகளை கனிவுடனும், அன்புடனும் நடத்திட வேண்டும்.

10. மாற்றுத்திறனாளி பயணிகள் ஏறும் பொழுதும், இறங்கும் பொழுதும் கண்காணித்து ஓட்டுனருக்கு சமிக்ஞை (Signal) செய்து பாதுகாப்பாக ஏற்றி இறக்க வேண்டும்.

11. இந்திய அரசு அறிவித்த மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய தேசிய அடையாள அட்டை (Unique Disability ID Card) and National Disability Identity Certificate Cards (NDIC) அசல் அட்டை கொண்டு, 40 சதவீதம் மாற்றுத் திறன் மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர் (Escort) ஒருவருடன் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (White board) மட்டும் கட்டணமில்லா பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும். இவர்கள் இருவருக்கும் உரிய கட்டணமில்லா பயணச் சீட்டினை பேருந்து நடத்துனர் வழங்க வேண்டும்.

12. அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் பாகுபாடின்றி மாநிலம் முழுவதும் புறநகர் பேருந்துகளில் பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி, 75% பயணக் கட்டண சலுகையில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

13. இயற்கை சீற்றம் உள்ள நாட்கள் மற்றும் இரவு நேரங்களில் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு கட்டண நிறுத்தம் இல்லாத இடங்களிலும், கோரிக்கையின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள் மற்றும் மகளிர் கேட்கும் பேருந்து நிறுத்தங்களில் பேருந்தினை நிறுத்தி ஏற்றி, இறக்கி செல்ல வேண்டும்.

14. ஒவ்வொரு மண்டலத்திலும் மாதந்தோறும் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொழுது, சிறப்பு விருந்தினராக மாற்றுத்திறனாளியை அழைத்து மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளை ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு தெரிவிக்குமாறும், அதற்கேற்ப மாற்றுத்திறனாளிகள் பேருந்தில் பயணம் செய்யும் பொழுது கனிவுடனும் பொறுமையுடனும் நடத்தப்பட வேண்டும் என்று பயிற்சி அளிக்கும் முகாமில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

பேருந்தில் மாற்றுத்திறனாளிகள் பயணம் செய்யும் பொழுது தவறாமல் மேற்குறிப்பிட்டுள்ள நிலையான இயக்க நடைமுறைகளை பின்பற்ற, தகுந்த சுற்றறிக்கையை அனைத்து பணிமனைகளுக்கும் அனுப்பி, ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு அறிவுறுத்தி, இது பின்பற்றப்படுகிறதா என கண்காணிக்கப்பட வேண்டும் என்று அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை சோ. பால்ராஜ்
### மே 4 (2015)



இளம் வயதிலேயே கழகத்தின்மீது பற்று கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஐ.சி.எப்–ல் பணியாற்றிய போது தொ.மு.ச. பேரவை ஆரம்பித்த போதே அதில் பொறுப்பு வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் –பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் “பால் உள்ள கொண்ட பால்ராஜ்”, “பாட்டாளிகளின் தோழன் பால்ராஜ்” என்று பாராட்டப்பட்ட இவர், 1989–ல் மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றதோடு, இரயில்வே துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே இலங்கைத் தமிழர்களுக்காக ரயில் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சேலம் மத்திய மாவட்டம்

# சேலம் மேற்கு - ஓமலூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச் சாவடி குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி மற்றும் ஓமலூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BLC) மற்றும் தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டமானது தலைமைக் கழக தேர்தல் பார்வையாளர்கள் இ.ஜி.சுகவனம் மற்றும் ராஜசேகரன் ஆகியோர் தலைமையில் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெறவுள்ளது. எனவே சேலம் மேற்கு மற்றும் ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BLC) மற்றும் தேர்தல் பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும், சேலம் மேற்கு மற்றும் ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| **ஓமலூர் சட்டமன்றத் தொகுதி - 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| **காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம்** | |
| **நேரம்** | **ஊராட்சி** |
| காலை 10.00மணி | காடையாம்பட்டி பேரூர், கூ.குட்டப்பட்டி பூசாரிப்பட்டி |
| காலை 11.00மணி | வேப்பிலை, பொம்மியம்பட்டி உம்பிளிக்கம்பட்டி, நடுப்பட்டி |
| நண்பகல் 12.00மணி | கணவாய்புதூர், டேனிஷ்பேட்டை |
| **ஓமலூர் சட்டமன்றத் தொகுதி - 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| **ஓமலூர் வடக்கு ஒன்றியம்** | |
| காலை10.00மணி | வெள்ளாளப்பட்டி, தேக்கம்பட்டி நாரணம்பாளையம் |
| காலை11.00மணி | தும்பிபாடி, சர்க்கரைசெட்டிபட்டி பொட்டியபுரம், சிக்கனம்பட்டி |
| மதியம் 12.00மணி | பல்பாக்கி, தாத்தியம்பட்டி |
| | காமலாபுரம் |
| **ஓமலூர் சட்டமன்றத் தொகுதி - 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| **ஓமலூர் தெற்கு ஒன்றியம்** | |
| காலை10.00மணி | ஊ.மாரமங்கலம் |
| காலை11.00மணி | தொளசம்பட்டி |
| பிற்பகல்03.00மணி | பெரியேரிப்பட்டி, சிக்கம்பட்டி |
| | எம்.செட்டிப்பட்டி , |
| மாலை 05.00 மணி | கருப்பூர் பேரூர் |
| **ஓமலூர் சட்டமன்றத் தொகுதி - 25.05.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| **தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம்** | |
| காலை 10.00மணி | மானத்தாள் |
| முற்பகல் 11.30 மணி | மல்லிகுந்தம், அமரகுந்தி |
| பகல் 12.00 மணி | ஆரூர்பட்டி, ராமிரெட்டிபட்டி |
| பகல் 01.00 மணி | செலவடை, அரியாம்பட்டி |
| **காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம்** | |
| பிற்பகல் 03.00 மணி | தாராபுரம், செம்மாண்டப்பட்டி, காருவள்ளி கொங்குப்பட்டி |
| மாலை 04.00 மணி | கஞ்சநாயக்கன்பட்டி, மூக்கனூர் |
| மாலை 05.00 மணி | தீவட்டிப்பட்டி, பண்ணப்பட்டி குண்டுக்கல் |
| **ஓமலூர் சட்டமன்றத் தொகுதி - ஓமலூர் கிழக்கு ஒன்றியம்** | |
| **01.06.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| காலை 10.00 மணி | மூங்கில்பாடி, கொல்லபட்டி, சங்கீதப்பட்டி |
| காலை 11.00 மணி | எட்டிகுட்டபட்டி, கோட்டமேட்டுபட்டி புளியம்பட்டி |
| நண்பகல் 12.00 மணி | ஓமலூர் பேரூர் |
| பகல் 01.00 மணி | கோட்டைமாரியம்மன்கோவில், பச்சனம்பட்டி திண்டமங்கலம் |
| **சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி - 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| **ஓமலூர் தெற்கு ஒன்றியம்** | |
| காலை 10.00 மணி | வெள்ளக்கல்பட்டி, சாமிநாயக்கன்பட்டி |
| | மாங்குப்பை |
| முற்பகல் 11.00 மணி | பி.நல்லாகவுண்டம்பட்டி, பாகல்பட்டி |
| பகல் 12.00மணி | முத்துநாயக்கன்பட்டி, செம்மண்கூடல் |
| **ஓமலூர் கிழக்கு ஒன்றியம்** | |
| பகல் 01.00 மணி | கோட்டக்கவுண்டம்பட்டி, செல்லபிள்ளைகுட்டை |
| **சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி - 13.05.2025 செவ்வாய்க்கிழமை** | |
| **சேலம் வடக்கு ஒன்றியம்** | |
| காலை 10.00 மணி | தளவாய்பட்டி, சேலத்தாம்பட்டி |
| காலை 11.00 மணி | அய்யம்பெருமாம்பட்டி, சர்கார்கொல்லபட்டி மல்லமூப்பம்பட்டி, |
| மாலை 05.00 மணி | கொண்டப்பநாயக்கம்பட்டி, செட்டிச்சாவடி எம்.பாலப்பட்டி |
| **சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி - 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| **மெய்யனூர் பகுதி** | |
| **நேரம்** | **வட்டம்** |
| காலை 09.00 மணி | 2வது வட்டம் |
| காலை 10.00 மணி | 19 வது வட்டம் |
| முற்பகல் 11.00 மணி | 23 வது வட்டம் |
| முற்பகல் 12.00 மணி | 24 வது வட்டம் |
| பகல் 01.00 மணி | 18 வது வட்டம் |
| **சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி - 25.05.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| **அழகாபுரம் பகுதி** | |
| காலை 09.00 மணி | 3வது வட்டம் |
| காலை 10.00 மணி | 4 வது வட்டம் |
| முற்பகல் 11.00 மணி | 5 வது வட்டம் |
| முற்பகல் 12.00 மணி | 17 வது வட்டம் |
| பகல் 01.00 மணி | 25 வது வட்டம் |
| **சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி - 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| **தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம்** | |
| காலை 10.00மணி | அழகுசமுத்திரம் |
| | கருக்கல்வாடி டி.கோணகாபாடி |
| **சூரமங்கலம் பகுதி** | |
| பிற்பகல்03.00மணி | 22 வது வட்டம் |
| பிற்பகல்04.00மணி | 21 வது வட்டம் |
| மாலை05.00மணி | 20 வது வட்டம் |
| மாலை06.00மணி | 1 வது வட்டம் |

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர்
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.